**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Ramaraj |
| P.W. | : 17 |
| Father Name | : Thoppi Nayakkar |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2024

**2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ஆர்.வாடிபட்டி ஊரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 25.10.2010ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நான் உடுமலை செல்ல வேண்டி கொழுமம் பஸ் நிறுத்தத்தில் சக்தி பேக்கரிக்கு முன்னால் நின்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த டிராக்டர் குப்பை பக்கத்தில் இருந்த வைத்திருந்த அவுட்டிகாயின் மீது ஏறி பலத்த சத்தத்துடன் வெடித்தது. அந்த காயில் இருந்த இரும்பு துகள்கள் எனது முகத்தில் பட்டது எனக்கு இடது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு பள்ளி செல்வதற்காக நின்றிருந்த குழந்தைகள், பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு காயம் ஏற்பட்டது.

108 ஆம்புல்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார்கள். அந்த டிராக்டரை ஓட்டி வந்தவர் கனகராஜ் ஆவார். அவர் ஆஜர் எதிரி தான். இது சம்மந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எதிரியை எனக்கு சம்பவத்தின் போது நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. போலீஸ் விசாரித்த போது தான் தெரியும். வெடி சத்தம் எதில் இருந்து வந்தது என்றால் டயர் வெடித்ததால் புகை வந்ததால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.09.04 09:59:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Marimuthu |
| P.W. | : 18 |
| Father Name | : Ramasamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2024

**2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசித்து வருகிறேன். உடுமலையில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் நான் கொமரலிங்கம் அரசு பள்ளியில் 11ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது 25.10.2010 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் பேருந்திற்காக நின்று கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்காக டிராக்டர் வந்தது ஒரு சாக்கின் மீது டிராக்டர் ஏறிய போது வெடிச்சத்தம் கேட்டது. புகை வந்தது. எனக்கு இடது காலில் பெருவிரல், சூண்டு விரல், நெற்றி, முகம் மற்றும் கழுத்து போன்ற இடங்களில் மேற்படி வெடி விபத்தினால் துகள்கள் சிதறி காயம் ஏற்பட்டது. என்னை முதலில் கொமரலிங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பின்னர்

மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்த இடத்தில் இருந்த சாக்கில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். டிராக்டரில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் ஒரு நபர் ஓட்டுநர் இருந்தார். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.09.04 09:59:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்